# DAILY BUZZ

With the support of Government of Tamil Nadu

## 16th Chennai International Film Festival

17th Dec 2018

Here we are on the 5th day of the Chennai International Film Festival. The audience that we are seeing for each of the screenings and the enthusiasm among the movie buffs of Chennai is Truly Amazing!

The star movies of the day were Dogman (2018, Italy movie, 4:30 pm at Devi Theatre), Yomeddine (2018, Egypt movie, 7 pm at Devi Theatre), Claire Darling (2018, France movie, 10:45 am at Devi Bala Theatre), The Wild Pear Tree (2018, Turkey movie, 9:30 am at Anna Theatre), Killing Jesus (2017, Colombia movie, 7 pm at Casino Theatre), Vada Chennai (2018, Indian-Tamil movie, 6 pm at Russian Cultural Centre) and Oscar winner, Mr. Resul Pookutty's The Sound Story (2018, Bilingual movie, 4 pm at Tagore Film Centre).



The Sound Story premiered at Canada on August 11, 2018. The Indian Premiere of the movie was at none other than the 16th Edition of the Chennai International Film Festival. Resul Pookutty as we all know is a renowned Indian film sound designer, sound editor and mixer. He won the Academy Award for Best Sound Mixing, along with Richard Pryke and Ian Tapp, for Slumdog Millionaire. He has worked in Hollywood, Hindi, Tamil and Malayalam. He interacted with the audience for a while after the screening of the movie and it was a wow moment for one and all!

### Best Picks of Dec 17



- Transit (Devi | 04.30pm)
- Volcano (Devi Bala | 1.30pm)
- Amin (Devi Bala | 05.30pm)
- Vision (Anna | 07.15pm)
- Ratsasan (Russian Cultural Centre | 06.00pm )

The Special Screening yesterday was the movie, The Songkeepers (2017, Australia movie, 5:30 pm at Devi Bala Theatre) which was liked a lot by the audience. Some of the other movies that we were appreciated during the film festival on Sunday are At War (2018, French movie), The Harvesters (2018, South Africa movie) and Painting Life (2018, English movie).

## Volcano | VULKAN

**Devi Bala | 01.00pm**

A series of odd coincidences has left Lukas, an interpreter for an OSCE military checkpoint inspection tour, stranded near a small southern Ukrainian steppe town. With now here to turn, this city boy finds shelter at the home of a colorful local named Vova. With Vova as his guide, Lukas is confronted by a universe beyond his imagination, one in which life seems utterly detached from any identifiablestructure . Lukas 's contempt for provincial life slowly melts away and sets him on a quest for a happiness he had never known could exist.



**Picks of the Day**

### Reaction from the Audience

"I am 25-year old who is coming to CIFF for the very first time. I came to know about this event through an ad in the newspaper. I was intrigued to find out how world cinema is different from the commercial movies that we get to see in India. I was totally amazed by the kind of movies that are taken around the world. The movies are very realistic and help me understand a country's culture much better. It even helps me understand how some other countries are very similar in culture to India. It was nice to see such a diverse genre of movies. I am definitely watching more of world cinema in the days to come. Having a fantastic time at the Chennai International Film Festival. Dayan, Shoplifters and Ex-Shaman are my personal favourites till now. Best wishes to CIFF and team for their success at 16th CIFF.

**Priya Raj, Part-time Homemaker & A full time-mom, Chennai**

## Pic Corner

Photos by CyberjoeantoClicks & L.Srinivasan










# Screening Schedule

## Day 5 | Monday, 17.12.18

| Venue | | | | | |
|---|---|---|---|---|---|
| Devi | 11.00 a.m. ROJO Dir.: Benjamín Naishtat Argentina \| 2018\| 109'-WC | 2.00 p.m. 53 Wars (53 wojny) Dir.: Ewa Bukowska Poland\|2018\| 82' -WC | 4.30 pm Transit Dir.:Christian Petzold Germany\|2018\| 101'-CFFG | 7.00 p.m. WINTER FLIES (Vsechno bude) Dir.:Olmo Omerzu Czech Republic \|2018\| 85'-WC | No Screening |
| Devi Bala | 10.45 AM Entranced Earth (Terra em Transe) Dir.:Glauber Rocha Brazil\|1967\|111'-CFB | 1.00 PM VOLCANO (VULKAN) Dir.: Roman Bondarchuk Ukraine \|2018\| 106'-WC | 3.30 PM Crackerjack Dir.:Paul Moloney Australia \|2002\|92' -AC | 5.30 PM Amin Dir.: Philippe Faucon France \| 2018 \| 91'-WC | 7.30 PM A TWELVE YEAR NIGHT (La noche de 12 años) Dir.: Álvaro Brechner Uruguay \|2018\|122'-WC |
| Russian Cultural Centre | 10.00 AM Padmaavat Dir.: Sanjay Leela Bhansali Hindi \|2018\|164' -IP | | 01.30pm Interactive Section with Sh Vetri Maaran | 03.00pm Annanukku Jey Dir.: Raj Kumar 2018\|110'\|Tamil -TFFC | 6.00 PM Ratsasan Dir.: Ram Kumar 2018\|169'\| Tamil -TFFC |
| Anna Theatre | 09.30 AM One Step Behind the Seraphim (Un Pas In Urma Serafimilor) Dir.:Daniel Sandu Romania\|2017\|150'-WC | 12.30 pm Axing (Darkoob) Dir.:Behrouz Shoaybi Iran \|2018\|90'-WC | 02.30 PM Asako I & II (Netemo sametemo) Dir.: Ryûsuke Hamaguchi\| Japan \| 2018 \|119'-WC | 04.30pm What Will People Say(Hva vil folk si) Dir.: Iram Haq Norway\|2017\|106'-WC | 7.15 p.m. Vision Dir.:Naomi Kawase France\|2018\|109 '-WC |
| Casino | 9.45 a.m. Tazzeka Dir.: Jean-Philippe Gaud France \| 2018 \| 95'-WC | 12.15 Noon Malcolm Dir.:Nadia Tass Australia\|1986\| 90' -AC | 2.45 p.m. Eva and Candela (¿Cómo te llamas?) Dir.:Ruth Caudeli Colombia\|2018\| 95'-WC | 04.45 p.m. When you no longer love me (Cuando dejes de quererme) Dir.: Igor Legarreta Spain \|2018\|101-WC | 7.00 p.m. IRO (Here) Dir.:Hadi Mohaghegh Iran\|2018\|82'-WC |
| NFDC Tagore Film Centre Capacity 100 seats | No Screening | | 2.00 PM Head - On (Gegen die Wand) Dir.:Fatih Akin Germany\|2004\|121'-RFA | 04.00 PM Good Old Boys Viejos amigos Dir.:Fernando Villaran Lujan Peru\|2014\|93'-FFG | No Screening |

Tamil Feature Film Competition: TFFC | Indian Panorama: IP | World Cinema: WC | Contemporary Films from | Australia-CFFA | Contemporary Films from Germany -CFFG | Country Focus Brazil : CFB | Retrospective-Fatih Akin: RFA | Australian Comedy : AC | Films from Grulac: FFG

**Seating for all shows will be on first come first served basis**



### Interactive Session with Director Vetrimaaran

Russian Cultural Centre | 17th Dec | 01.30 pm

Moderated by Shylaja Chetlur

# அந்தார்ககினி: நாம் ஏற்க மறுக்கும் யதார்த்தம்!

## டிசம்பர் 15-ம் தேதி ரஷிய கலாச்சார மையத்தில் 12 மணிக்கு திரையிடப்பட்ட படத்தின் விமர்சனம்

வங்காளத்தின் பரந்த நிலப்பரப்பில் எந்த சம்பந்தமுமில்லாத அந்த நான்கு பெண்கள், வாழ்க்கை ஏற்படுத்தும் நெருக்குதல்களில் அவர்கள்- அவர்களை மீறி வெளிப்படுத்தும் அந்தத்தருணம் அதன் தொகுப்பே அந்தார்ககினி.

நான்கு குறும்படங்கள், ஒவ்வொன்றும் சமூகத்தின் வெவ்வேறு அடுக்குகளில் வாழும் மனிதர்களை குறிப்பாக பெண்களை ஆழ்ந்து நோக்குகிறது. ஒவ்வொன்றிலுமுள்ள கதாப்பாத்திரங்கள் தங்களுக்கென்று வகுக்கப்பட்டுள்ள நியதிகளை மீறும் போது ஏற்படும் கொந்தளிப்புதான் இவற்றை ஒரு படமாக இணைக்கிறது. மகள், சகோதரி, தோழி, மனைவி ஆகிய பாத்திரங்களில் வாழும் பிரியங்கா, புல்டி, லட்சுமி, ப்ரியா ஆகிய நால்வரும் தங்களுக்கும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாத்திரத்துக்கும் இடையே நிகழும் உரையாடலில் சரி-தவறு, சமூக நியதி, யதார்த்தம் ஆகியவற்றை கேள்விக்குட்படுத்துகிறார்கள்.

பிரியங்கா (மகள்) – உண்மையில் அவள் மகள் அல்ல, ஆனால் தன்னை மகளாக காட்டிக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. பிரியங்கா யார்? அவள் ஒருவனை காதலிக்கிறாள், ஆனால் அந்தக் காதலில் ஒரு விலகல் ஏற்படுகிறது. ''எல்லா கேள்விகளுக்கும் விடை இருந்தாகவேண்டும் என்பதில்லை'' என்று தன் காதலனிடம் சொல்லுவதன் மூலம் கேள்வி-பதிலுக்குள் அடங்காத தன் இருப்பை வெளிப்படுத்துகிறாள்.

புல்டி (சகோதரி) – சாதாரண டீ கடை வைத்திருக்கும் புல்டியும் அவள் அண்ணனும் பெற்றோரை இழந்தவர்கள். புல்டிக்கு வாழ்க்கையில் இருக்கும் ஒரே உறவு அவள் அண்ணன் மட்டும் தான். ஏழ்மையான அவர்களின் வாழ்க்கையில் திடீரென்று ஏற்படும் மாற்றங்கள் அதற்குள் சுழலும் புல்டி எடுக்கும் ஒரு முடிவு கடுமையானதொரு நிசப்தத்தை நம்முள் ஏற்படுத்துகிறது.

லட்சுமி (தோழி) – தன்னந்தனியே வாழும் ஒரு கிராமத்துப்பெண் கணவனாலும், குடும்பத்தாலும் புறந்தள்ளப்படுகிறாள். ஒரு நாள் எதிர்பாராத நபர் அவர் வீட்டின் முன் தோன்றுகிறார். அந்த நபர் லட்சுமியிடம் அவளுக்கே தெரியாத ஒன்றை அவளிடமிருந்து வெளிக்கொணர அது எப்படி தன் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் தீர்மானிக்கும் ஒன்றாக உள்ளது என்பதை அறிகிறாள்.

ப்ரியா (மனைவி) – எளிமையான குடும்பப்பெண். கல்யாணம் ஆகி ஐந்து வருடமாகிறது. ஆறு மாதமாக கணவனுக்கு வேலையில்லை, வீட்டுப் பொருளாதாரச் சூழலில் வறட்சி இருப்பினும் கணவன் மனைவிக்குள்ளிருக்கும் உயிரோட்டமான காதல், புறச்சூழலை மறக்கச் செய்கிறது. தங்கள் ஐந்தாம் வருட திருமண நாளைக் கொண்டாட முடிவு செய்கிறார்கள். அதற்கு ஒருவருக்கு தெரியாமல் மற்றொருவர் செய்யும் ஏற்பாடுகள் அது அவர்களே எதிபாராத ஒரு வெளிக்கு அழைத்துச் செல்கிறது. அந்த வெளியில் பிரியாவுக்கும் அவள் கணவனுக்கும் நடக்கும் உரையாடல்கள் அதன் விளைவாக ஏற்படும் மாற்றங்கள் ப்ரியாவின் பதிவாக அமைகிறது.

இந்த நான்கு பேரின் கதையும் ஏதோ ஓரிடத்தில் ஓ'ஹென்றியின் 'கிப்ட் ஆப் மேகி' யையும் புதுமைபித்தனின் பொன்னகரத்தையும் நிச்சயம் நினைவுபடுத்தும். காலங்கள் தான் மாறுகின்றனவேயொழிய காட்சியில் பெரிய மாற்றம் இல்லை என்பதே அடைகிற புரிதலாகிறது. வங்காளம் போன்ற ஒரு இடதுசாரி ஆட்சியின் கீழ் பல காலம் இருந்திருக்கும் இடத்தில் வாழும் குடும்பங்கள், தனிமனிதர்கள் அந்த அரசு, சித்தாந்தத்தின் நிழல் கூட படாத சூழலே தற்போதைய யதார்த்தமாக நிலவுகிறது என்பதை படம் பிரதிபலிக்கிறது.



இந்தப் படத்தின் இயக்குநர் அர்னாப் கே மித்தியா இந்த படம் எடுப்பதற்கான காரணம் பற்றி கூறும் போது 'தற்கால சமூக உறவுகள் மிகவும் பிரச்சனையான ஒன்றாக உள்ளது, மனிதர்களிடம் நேரில் பேசுவதைவிட போன் மூலம் பேசுவதே அதிகம். இந்த சமூகச்சூழல் தான் அந்தார்ககினி எடுக்க உந்துதலாக இருந்தது' என்கிறார்.

யதார்த்தத்னின் மேல் நமக்கு விமர்சனம் இருக்கலாம், எதிர்க்கலாம் அல்லது ஏற்கலாம். ஆனால் புறந்தள்ள முடியாது. அந்தார்கனி நம்முன் நிற்கும் நாம் ஏற்றுக்கொள்ள மறுக்கும் யதார்த்தம்.

இனியன்

# திருப்பங்கள் மூலம் கவனிக்க வைப்பவன்!

## ரஷிய கலாச்சார மையம், மாலை 6:00 மணி

சுமார் 16 வயதுள்ள பள்ளி மாணவிகளைத் தேடிக் கொல்லும் சைக்கோ கொலைகாரன் யார் என்று போலீஸ் கண்டுபிடித்தால் அதுவே 'ராட்சசன்'.

ஆர்வமில்லாமல் சப் இன்ஸ்பெக்டர் ஆகும் விஷ்ணு விஷால் கொலையைச் சுற்றி நடக்கும் மர்மங்கள் குறித்து விசாரிக்கும் போது முழுமையான போலீஸ் அதிகாரியாக மாறி விடுகிறார். அது கதை நாயகனுக்கான பாத்திரப் படைப்பில் முக்கிய அங்கம் வகிக்கிறது. கொலைகாரனை நெருங்கும் போது நடுக்கத்தையும், அக்கா மகள் காணாமல் போனதில் பதற்றத்தையும், எதிராளியின் மனநிலை சமநிலையைக் குலைக்க கையாளும் யுத்தியில் பக்குவமான நடிப்பையும் வெளிப்படுத்தி இருக்கிறார். நாயகனுக்கான அம்சங்கள் அழகாய் கைவரப் பெற்றிருக்கும் விஷ்ணுவிடம் சிறந்த படங்களில் 'ராட்சசன்' முதலிடம் வகிக்கிறது. காக்கிச்சட்டை விஷ்ணுவுக்கு கம்பீரம் சேர்த்திருக்கிறது.



பள்ளி ஆசிரியையாக அமலாபால் வந்து போகிறார். ஹியரிங் எய்டு சம்பந்தப்பட்ட அந்தக் காட்சியிலும், ஆட்டோ ஓட்டுநரைத் தேடும் காட்சியிலும் கதையின் திருப்பத்துக்குப் பயன்பட்டிருக்கிறார்.

சிரிப்பு கேரக்டரிகளிலேயே நடிக்கும் முனீஸ்காந்த் என்கிற ராம்தாஸும், காளிவெங்கட்டும் சீரியஸ் நடிப்பில் கவனம் ஈர்க்கிறார்கள். அதிகாரத் தோரணையில் ஈகோவுடன் முறைப்பு காட்டும் சூசன், போலீஸ் உயர் அதிகாரி கஜராஜா, நிழல்கள் ரவி, ராதாரவி, வினோதினி ஆகியோர் படத்தின் கதையோட்டத்தில் இயல்பாய்ப் பொருந்திப் போகிறார்கள். ஜிப்ரானின் இசையும், பி.வி.ஷங்கரின் ஒளிப்பதிவும் படத்துக்கு மிகப்பெரிய பலம் சேர்க்கின்றன.

ஒருதலைக் காதலால் நடக்கும் விபரீதங்கள், ஆள் கடத்தல் குற்றங்கள், பாலியல் பலாத்காரங்கள் என்று பெண்களைச் சுற்றிலும் இருக்கும் பிரச்சினைகளை மிக அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர் ராம்குமார். சம்யுக்தா, அமுதா, மீரா, அம்மு என்ற நான்கு மாணவிகளின் கொலை குறித்த விவரணைகள், கொலை செய்யப்பட்ட விதம் பீதியை வரவழைக்கிறது. தடயம் இல்லாமல் தவிக்கும் போலீஸார் துப்பு துலங்க கிப்ட் பாக்ஸ், பொம்மையைக் க்ளூவாகக் கொடுத்திருப்பது சிறந்த திரைக்கதை உத்தி.

ஆட்டோ டிரைவர், பள்ளி ஆசிரியர் என அடுத்தடுத்த சந்தேகங்கள் எழ, அனைத்தும் ஒரு கட்டத்தில் மாறி மிகப்பெரிய மோசமான விளைவைச் சந்தித்த ஒருவனின் மனநிலைப் பிறழ்வுதான் காரணம் என்பதை தர்க்க ரீதியாக விளக்கியிருப்பது இயக்குநரின் புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறது. பள்ளி மாணவியைக் காப்பாற்றப் போய் அங்கு வெளிப்படும் ஒரு ட்விஸ்ட், மேஜிக் ஷோ செய்யும் ஆசிரியைத் தேடிப்போக அங்கு வெளிப்படும் இன்னொரு ட்விஸ்ட் என கதையின் திருப்பங்கள் கச்சிதத் தன்மையுடன் அமைகின்றன. மலைக்க வைக்கும் அளவுக்கு உழைப்பைக் கொட்டி நுட்பமான திருப்பங்களில் கவனிக்க வைத்த விதத்தில் 'ராட்சசன்' கவனிக்க வைக்கிறான்.



கார்த்திக் கிருஷ்ணா

# எது நிஜ சினிமா? - 15 ஆண்டுகளாக CIFF வரும் 72 சினிமா ஆர்வலர்

உலகத் திரைப்படங்கள் பார்ப்பது மூலமாகவே உண்மை சினிமாவைப் புரிந்துகொள்ள முடியும் என்கிறார், 15 ஆண்டுகளாக சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவுக்கு வரும் 72 வயது உலக சினிமா ஆர்வலர் சத்தியமூர்த்தி.



கடலூரைச் சேர்ந்த சத்தியமூர்த்தி தனது 60 வயது வரை டூரிஸ்ட் கார் ஆபரேட்டராக பணிபுரிந்து, பிறகுதான் சேமித்து வைத்த பணத்தில் முதுமையை செலவு செய்வதாகக் கூறினார்.

" வருடந்தோறும் நடக்கும் சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவிற்காக சென்னையிலுள்ள தனது மகள் வீட்டில் தங்கி அங்கிருந்து திரையரங்குகளுக்கு வந்து செல்கிறேன்" என்றார். அவரது உலக சினிமா ஈடுபாடு எங்கு தொடங்கியது என்று கேட்டதற்கு மெல்லிய புன்னகையுடன் தன் பயணத்தை பகிர்ந்துகொண்டார்.

"சின்ன வயசுல இருந்தே தமிழ், கன்னடம், தெலுங்குன்னு எல்லா படமும் பார்ப்பேன். சென்னையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த காலத்தில் மெட்ராஸ் பிலிம் சொசைட்டி என்ற ஒரு அமைப்பு சந்தா அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருந்தது. அதில் மாதம் இத்தனை படங்கள் என குறிப்பிட்ட அளவில் உலகத் திரைப்படங்கள் திரையிடப்பட்டது. அங்குதான் எனக்கு உலக சினிமா பற்றிய அறிமுகம் கிடைத்தது.

பின்னர் அந்த அமைப்பிலிருந்து கருத்து வேறுபாடு காரணமாக சென்னை பிலிம் சொசைட்டி என்று மற்றொரு அமைப்பு உருவானது இயக்குனர் ஹரிஹரன் போன்றோர் அதில் முக்கியப் பொறுப்பில் இருந்தார்கள். அங்கே இடதுசாரி சிந்தனை உள்ளோர் இருந்ததனால் நல்ல திரைப்படங்கள் அதிகமான அளவில் திரையிடப்பட்டன. இவையெல்லாம் தான் எனக்கு உலக சினிமாவுக்கான வாயிலை திறந்து காட்டியது" என்றார்.

" நல்ல சினிமா பார்க்கவேண்டும்ங்கிற ஆசை தான் உலக சினிமா பார்க்க தூண்டியது. இப்போதெல்லாம் வெளிவரும் படங்களில் பெரும்பாலும் கமர்சியலாக வரக்கூடிய திரைப்படங்களே அதிகம். அதிலும் தமிழ், இந்தி என இரண்டும் ரொம்ப கமர்சியலாவே ஆகிடுச்சு. படங்கள் உள்ளடக்கமோ பெரும்பாலும் ஆபாசமா இருக்கு, நம்ப முடியாத செய்திகளை கொண்டிருக்கு. ஆனா இங்க, திரைப்பட விழாவுல திரையிடப்படும் திரைப்படங்கள் அப்படிப்பட்டது இல்லை. ஒவ்வொரு திரைப்படமும் வேற வேற தளத்துக்கு நம்மள கூட்டிட்டு போகுது.

உலகத் திரைப்படங்கள் பார்க்குறது மூலமா அறிவு வளரும், உண்மையான திரைப்படம்னா என்னனு புரியும். தமிழ்ப் படம் மட்டுமே பார்த்துட்டு இருந்தா கடைசி வரைக்கும் சினிமான்னா என்னனே புரிஞ்சுக்க முடியாது. சினிமா என்கிற பேர்ல 'டிராமா' பார்த்துருப்பீங்க அவ்ளோ தான்" என்றார் அவர்.

பட விழா எதிர்பார்ப்புகள் குறித்து அவரிடம் கேட்டதற்கு, "இந்த வருட விழாவில் என்னுடைய எதிர்பார்ப்பாக அரசியல், குடும்ப உறவுகள் மற்றும் எதார்த்தமான திரைப்படங்கள் ஆகியவற்றை தேர்ந்தெடுத்து பார்க்கிறேன்.

ஒவ்வொரு இடத்துக்கும் போய் வர எதாச்சும் கொஞ்சமா சாப்பிட்டாலே நிறைய செலவாயிடுது. இதற்கு ஒரு மாற்று இருந்தா இன்னும் நிறைய பேர் கூட வர வசதியா இருக்கும்.

முன்னாடி எல்லாம் பத்து நாள் இருந்த திரைப்பட விழா போன வருஷமும் இந்த வருஷமும் எட்டு நாள் ஆக ஆயிடுச்சு. இது கொஞ்சம் ஏமாற்றம்தான்" என்றார் 72 வயது உலக சினிமா ஆர்வலர் சத்திய மூர்த்தி.

இனியன்

FOLLOW US TO GET REGULAR UPDATES
Chennaifilmfest icafindia
ChennaiIFF icaf_chennai
icaf_chennai

CIFF DAILY BUZZ
17th Dec 2018



# இன்று என்ன படம் பார்க்கலாம்?

- 'நெல்லை' ஜெனா பரிந்துரைகள்

## ROJO | ARGENTINA | 2018

தேவி, காலை 11.00 மணி




7 0 களில் நடக்கும் கதை. குடும்பம், நண்பர்கள் என ஒரு பிரபல வழக்கறிஞரின் வாழ்க்கை மிகச் சிறப்பாக சென்றுகொண்டிருக்கிறது. வெளியூரிலிருந்து ஒரு அந்நியன் அங்கு வருகிறான். அவன் வெளித்தோற்றத்திற்கு அமைதியானவன், துப்பறிவாளன். அவன் வந்தபிறகு வழக்கறிஞர் வாழ்க்கையில் நிறைய சிக்கல்களும் கேள்விகளும் உருவாகிறது. டொராண்டோ திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. பல்வேறு திரைப்பட விழாக்களில் சிறந்த ஒலிப்பதிவு, சிறந்த ஒளிப்பதிவு மற்றும் சிறந்த இயக்குநர் ஆகிய பிரிவுகளில் விருதுகள் பெற்ற படம்.

## VOLCANO / VULKAN | UKRAINE | 2018

தேவிபாலா, பகல் 1.00 மணி



லூகாஸ், இவர் ராணுவத்துக்கு மொழிபெயர்ப்பாளராக இருப்பவர். ஒரு பயணத்தின் போது தெற்கு உக்ரைனின் ஒரு சிறு ஊரில் சிக்கிக் கொள்கிறார். விசித்திர ஊரில் விசித்திரமான மனிதராக லூகாஸ். இங்கு துரதிர்ஷ்டவசமான பல நிகழ்வுகளுக்குள் வீழ்கிறார் லூகாஸ். கதை ஒரு டார்க் ஹியூமர் பாணியில் செல்லும், காட்சிகள் ஆழ்மன எதார்த்தச் சித்தரிப்புகளாக சர்ரியல் வண்ணம் கொள்கிறது. கடுமையான சிறை உள்ளிட்ட அனுபவங்களுக்குப் பிறகு ஒரு வீட்டில் அடைக்கலமாகிறார். அங்கு வோவோ என்பவரும் அவரது மயக்கும் மகள் மருஷ்கா ஆகியோர் உள்ளனர். கதைப்போக்கு குறுக்குமறுக்காகச் செல்லும், நேர்கோட்டு திரைவாசகனுக்கு இந்தப் படம் வேறொரு வித்தியாசமான அனுபவத்தைக் கொடுக்கும்.

## MALCOLM | AUSTRALIA | 1986

கேஸினோ, பகல் 12.15 மணி



கூச்ச சுபாவம் கொண்டவர் கதையின் நாயகன். இயந்திரங்களை வைத்து மாயாஜாலம் புரிவதில் திறமையானவர். ஒரு கட்டத்தில் தனது வேலையை இழக்க தனது நண்பர்களுடன் சேர்ந்து வங்கிகளில் திருட ஆரம்பிக்கிறார். இவர்களது வாழ்க்கை எவ்வாறு நகைச்சுவை மற்றும் சுவாரசியங்களுடன் பயணிக்கிறது என்பதை கூறுகிறது மல்காம் திரைப்படம். 86ல் இத்திரைப்படத்திற்கு சிறந்த படம், சிறந்த திரைக்கதை, சிறந்த இயக்குநருக்கான விருதுகளை ஆஸ்திரேலிய திரைவிழாக்களில் பெற்றுள்ளது.

## AXING / DARKOOB | IRAN | 2018

அண்ணா, பகல் 12.30 மணி

தன் குழந்தை இறந்துவிட்டதாக நினைத்துக் கொள்கிறாள் மாஷா. ஆனால், அந்தக் குழந்தை உயிருடன் மாஷாவின் முன்னாள் கணவனிடம் வளர்வது தெரிய வருகிறது. எனவே, குழந்தையை அழைத்து வருவதற்காக செல்கிறாள். அப்போது அவளுடைய முன்னாள் கணவனையும், அவருடைய புது மனைவியையும் சந்திக்க நேர்கிறது. தீர்வின் இறுதி வடிவத்திற்குள் பல்வேறு பிரச்சினைகள் வெடிக்கின்றன. 2 விருதுகள் 8 பரிந்துரைகள் பெற்ற படம்.



## PADMAAVAT | HINDI | 2018

ரஷிய கலாச்சார மையம், காலை 10.00 மணி



ரஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த ராணி பத்மாவதிக்கும் ரஜபுத் அரசின் மேவார் மாகாண சிற்றரசர் ராணா ராவல் ரத்தன் சிங்குக்கும் இடையிலான காதல் மற்றும் தியாகத்தின் பிரதிபிம்பமாக அமைந்த படம். அவர்கள் காதல் வாழ்க்கையில் எந்த சிக்கலுமில்லை, அலாவுதீன் கில்ஜியின் கண்கள் பத்மாவதியின்மேல் விழும்வரை. கில்ஜி வம்சத்தின் கொடூர அரசர்களில் ஒருவனான அலாவுதீன் கில்ஜி சொந்த சகோதரர்கள், மாமனார், சித்தப்பாக்கள் உள்ளிட்ட பலவரையும் கொன்றுவிட்டு அரியணை ஏறியவன். நிலத்தையும் பெண்களையும் கைப்பற்றுவதற்காகவே அவன் அவன் படையெடுத்துத் தாக்குபவன். அவ்வகையிலேயே அலாவுதீன் கில்ஜி பத்மாவதியை தன் வசமாக்கிக்கொள்ள திட்டமிட்டு ராஜா ரதன் சிங் ஆண்டு வந்த சித்தொர்கர் சாம்ராஜ்யத்தின் மீது படையெடுக்கிறான். கொஞ்சம் வரலாறும் நிறைய புனைவுகளும் கலந்த கதை நிறைய சர்ச்சைகளையும் தடைகளையும் சந்தித்தது.

## AMIN | FRANCE | 2018

தேவிபாலா, மாலை 05.30 மணி



செனகல் நாட்டைச் சேர்ந்த அமீன், பிழைப்புக்காக பிரான்ஸ் நாட்டுக்கு வேலைக்கு வருகிறார். அமீனுக்கு ஆயிஷா என்ற மனைவியும், 3 குழந்தைகளும் உள்ளனர். பாரிஸ் நகரின் புறகநகரில் கட்டுமான நிறுவனத்தில் பணியாற்றும் அமீன் தன்னுடைய சம்பாத்தியத்தின் பெரும்பகுதியை செனகல் நாட்டில் உள்ள தனது குடும்பத்தினருக்கு அனுப்புகிறார். ஒருநாள் பாரிஸ் நகரில் ஒரு செவிலியர் வீட்டுக்கு வேலைக்குச் செல்லும் அமீன், அவருடன் தொடர்பு ஏற்படுகிறது. அதன்பின் அமீன் வாழ்க்கை என்ன ஆனது என்பதை கதை விவரிக்கிறது. கேன்ஸ் திரைவிழாவில் டைரக்டர்ஸ் ஃபார்ட்நைட் பிரிவில் திரையிடப்பட்ட படம்.


## Our Sponsors and Partners

AWARD SPONSOR: SATHYABAMA
SPONSORED BY: TVS, Kalyanamalai, Travel Masters India
MEDIA PARTNER: The Hindu
HOSPITALITY PARTNER: The Savera
SUPPORTING ORGANIZATIONS
CULTURAL PARTNERS: Consulate-General of Japan Chennai, NFDC, Goethe Institut, Norwegian Film Institute
VENUE PARTNERS: Devi, Devi Bala, Casino Theatre, NFDC Tagore Theatre
PRESS RELATIONS
ONLINE TICKETING PARTNER: bookmyshow
MOVIE INFO PARTNER: MovieBuff
Online KDM & DCP Delivery Service: Qube Wire, Qube
nithra, Madras Talkies, Snowman Branding
DESIGN PARTNER: V.R.Graphics


Printed and Published by Indo Cine Appreciation Foundation Chennai - 600006